# BSNL ஊழியர் சங்கம்
## தமிழ் மாநிலம்

---

### ஈரோடு மாவட்ட இணைந்த செயற்குழுக் கூட்டம்

அன்பார்ந்த தோழர்களே,

27.07.2017 அன்று நடைபெற உள்ள அகில இந்திய வேலை நிறுத்தத்தை ஒட்டி BSNL ஊழியர் சங்கம் மற்றும் SNEA சங்கம் இணைந்த ஈரோடு மாவட்ட செயற்குழுக் கூட்டம் ஈரோடு BSNL அலுவலகத்தில் உள்ள கருத்தரங்க அறையில் 11.07.2017 அன்று நடைபெற்றது.

SNEA மாவட்ட தலைவர் தோழர் மோகன் மற்றும் BSNL ஊழியர் சங்க மாவட்ட தலைவர் தோழர் கண்ணுசாமி ஆகியோர் தலைமையில் நடைபெற்ற செயற்குழுக் கூட்டத்தில் கலந்துக் கொண்ட தோழர்களை SNEA மாவட்ட உதவிச் செயலாளர் தோழர் M.பழனியப்பன் வரவேற்றார். BSNL ஊழியர் சங்க மாவட்ட செயலாளர் தோழர் L.பரமேஸ்வரன் மற்றும் SNEA மாவட்ட செயலாளர் தோழர் G.துரை மற்றும் AIGETOA மாவட்ட செயலாளர் தோழர் M.மாயகிருஷ்ணன் ஆகியோர் செயற்குழுக் கூட்டத்தின் நோக்கத்தை விரிவாக எடுத்துரைத்தனர். BSNLEU மாநில அமைப்பு செயலாளர் தோழர் V.மணியன், SNEA மாநில சங்க நிர்வாகிகள் தோழர் சந்திரசேகரன், தோழர் சுரேஷ் மற்றும் தோழர் C.பரமசிவம் ஆகியோரும் AIBDPA மாவட்ட செயலாளர் தோழர் P.சின்னசாமி ஆகியோரும் வாழ்த்துரை வழங்கினார்கள்.

SNEA மாநில செயலாளர் தோழர் R.ராஜசேகர் மற்றும் BSNL ஊழியர் சங்க மாநில செயலாளர் தோழர் A.பாபு ராதாகிருஷ்ணன் ஆகியோர் சிறப்புரையாற்றினார்கள். அவர்கள் இருவரும் தங்களின் சிறப்புரையில் வேலை நிறுத்தத்தின் நோக்கங்கள் தொடர்பாகவும், இந்த வேலை நிறுத்தம் வெற்றிபெறச்செய்ய மாவட்ட சங்க நிர்வாகிகள் மேற்கொள்ளப்பட வேண்டிய பணிகள் தொடர்பாகவும், கோரிக்கைகள் தொடர்பாகவும் விளக்கமாக எடுத்துரைத்தனர்.

13.07.2017 அன்று நடைபெற உள்ள உண்ணாவிரதம் மற்றும் 27.07.2017 வேலை நிறுத்தம் ஆகியவற்றை ஈரோடு மாவட்டத்தில் முழுவெற்றி பெறச்செய்வோம் என உறுதியோடு பங்கேற்ற தோழர்கள் அனைவருக்கும் ஈரோடு மாவட்ட BSNLEU பொருளாளர் தோழர் ஈஸ்வரன் நன்றி கூறி இந்த இணைந்த மாவட்ட செயற்குழுவை முடித்து வைத்தார்.

சிறப்பானதொரு ஏற்பாடுகளை செய்த ஈரோடு மாவட்ட சங்கத்தை மனதார பாராட்டுவதுடன் இதர மாவட்ட சங்கங்களும் இது போன்ற இணைந்த மாவட்ட செயற்குழுக்களை உடனடியாக நடத்தி வேலை நிறுத்த தயாரிப்பு பணிகளை முடுக்கி விட வேண்டும் என தமிழ் மாநில சங்கத்தின் சார்பாக கேட்டுக் கொள்கிறோம்.

வாழ்த்துக்களுடன்,

**தோழமையுள்ள,**

**(A.பாபு ராதாகிருஷ்ணன்)**
**மாநிலச் செயலாளர்**




தோழர் A.பாபுராதாகிருஷ்ணன் CS BSNLEU




தோழர் R.ராஜசேகர் CS SNEA



பங்கேற்ற தோழர்கள்